31.07.2025
OS. No.111/2020
**பி.வா.சா.1 –** திரு.ரெக்ஸ் ஆன்டனி ஜேம்ஸ், த/பெ.டெரி ஜெ நாதன்

(இடைக்கால மனு எண்.5/2025 மற்றும் 6/2025 ல் கடந்த 30.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது)

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

எனது தரப்பில் கூடுதல் சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

1. 14.11.1957 ல் எஸ்.ஏ.ஏ.நாதன் அவர்களின் மனைவி ஜே.வி.ஏ.நாதன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 1 ஆகும்.**
2. துணை ஆய்வாளர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சர்வே நோட்டீஸ் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 2 ஆகும்.**
3. எஸ்.ஏ.ஏ.நாதனின் இறப்பு சான்றிதழ் நகல் (இறந்த தேதி 04.04.1989) **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 3 ஆகும்.**
4. எஸ்.ஏ.ஏ.நாதனின் வாரிசு சான்றிதழ் நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 4 ஆகும்.**
5. முதல் பிரதிவாதியின் தந்தை டெரி நாதனின் இறப்பு சான்றிதழ் நகல் (இறந்த தேதி 01.08.2018) **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 5 ஆகும்.**

6. முதல் பிரதிவாதியின் தந்தை டெரி நாதனின் வாரிசு சான்றிதழ் நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 6 ஆகும்.**

7. திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.1269/2016 தற்போது முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.371/2023 பிராது நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 7 ஆகும்.**

8. திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.1269/2016 தற்போது முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.371/2023 ல் முதல் பிரதிவாதியின் பாட்டி ஜே.வி.ஏ.நாதன் தாக்கல் செய்த எதிர்வழக்குரை நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 8 ஆகும்.**

9. 14.02.2020 ல் வாதி தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் உண்மை நகல் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 9 ஆகும்.**

10. 11.03.2020 ல் முதல் பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 10 ஆகும்.**

11. 05.02.2017 ல் முதல் பிரதிவாதியின் தகப்பனாருக்கு வந்த தொலைபேசி கட்டண பில் **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 11 ஆகும்.**

12. மின் கட்டண ரசீதுகள் (நான்கு எண்ணம்) **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 12 வரிசை ஆகும்.**

13. சொத்து வரி ரசீது **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 13 ஆகும்.**

14. குடிநீர் கட்டண ரசீது **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 14 ஆகும்.**

15. புதை வடிகால் கழிவுநீர் கட்டண ரசீது **பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் 15 ஆகும்.**

(பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 15 வாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது.)

(குறுக்கு விசாரணைக்கு வேண்டுகோளின் அடிப்படையில் ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Advocate